சுருக்கம்

பாசனம் – நீர்வள ஆதாரத் துறை – 2008–2009 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டம் – தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டம் பாலக்குறிச்சி கிராமத்தின் அருகே கருமேனியார் ஆற்றின் குறுக்கே ரூ.58.00 இலட்சம் செலவில் தடுப்பணை கட்டும் திட்டம் – நிலை நிதிக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டது – நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (ப்பி2) துறை

அரசாணை (நிலை) எண். 136 நாள் 21.5.2008

வைகாசி 8, திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்கப்பட்டது:

1. தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சென்னை கடிதம் எண்.OT4/AE4/Part II/2008-09/2007, நாள் 11.1.2008
2. தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சென்னை கடிதம் எண். எப்2/பகுதி II திட்டங்கள் 2008–2009, நாள் 21.4.2008

-----

ஆணை:

நீர்வள ஆதாரத் துறை, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டம், பாலக்குறிச்சி கிராமத்தின் அருகே கருமேனியார் ஆற்றின் குறுக்கே ரூ.58.00 இலட்சம் செலவில் தடுப்பணை கட்டும் திட்டத்திற்கு 2008–2009–ஆம் ஆண்டு, பகுதி II திட்டத்தின் கீழ் நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அனுப்பப்பட்ட விளக்கக் குறிப்பில் நீர்வள ஆதாரத் துறை, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள், கருமேனியாறு, சாத்தான்குளம் வட்டத்தின் வறட்சிப் பகுதியில் ஓடும் வடிகால் நதியாகும் என்றும், கருமேனியாற்றின் இரு கரைகளில் வாழும் சாத்தான்குளம் கிராம மக்கள் பாசனத்திற்கு கிணறுகளையே சார்ந்திருப்பதால், கிணறுகளின் நீர் மட்ட அளவினை உயர்த்துவதன் மூலம் இப்பகுதியின் பாசன வசதிகளை மேம்படுத்த இயலும் என்றும், தற்போது கருமேனியாற்றின் குறுக்கே 1.59 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட ஒரு தடுப்பணை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும், இத்திட்டம் அமையப் பெறும் பகுதி உடன்குடி வட்டாரம் அதிநுகர்வு ஒன்றியமாகும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், இத்திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் இந்த பாசன பரப்பில் உள்ள 29 கிணறுகள் மூலமாக, 71.15 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதிபெறும் மற்றும் கூடுதலாக 61.75 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் எனவும், இத்திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்த தேவையில்லை எனவும், இதன் பயன் செலவு விகிதம் 1.86:1 ஆகும் எனவும், இத்திட்டத்திற்கு தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஒத்திசைவு அளித்துள்ளார் எனவும், இத்திட்டத்தின் மதிப்பு 2008–2009ம் ஆண்டு விலைவிகிதப்படி ரூ.58.00 இலட்சங்கள் ஆகும் எனவும் மற்றும் இத்திட்டம் நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டல தலைமைப் பொறியாளர் அவர்களால் செய்து முடிக்கப்படும் என்பதால், இத்திட்டத்தினை

செயல்படுத்த கூடுதல் பணியாளர்கள் தேவைப்படாது எனவும் நீர்வள ஆதாரத் துறை, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட திட்டத்தினை 2008–2009–ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்கு நிலை நிதிக் குழு (Standing Finance Committee) ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டம், பாலக்குறிச்சி கிராமத்தின் அருகே கருமேனியார் ஆற்றின் குறுக்கே ரூ.58.00 இலட்சம் (ரூபாய் ஐம்பத்தெட்டு இலட்சம் மட்டும்) செலவில் தடுப்பணை கட்டும் திட்டத்திற்கு 2008–2009–ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது. சில்லறை செலவினங்கள், சிறு மேற்பார்வை செலவுகள் மற்றும் எதிர்பாரா செலவுகள் ஆகிய அனைத்து இனத்தின் கீழ் ஏற்படும் மொத்த செலவுகள், மொத்த பணி (works) மதிப்பீட்டுத் தொகையில் 2.5% மேல் மிகாமல் இருக்க வேண்டும் என்கிற நிபந்தனையுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :-

"4702 – 00 சிறு பாசனம் குறித்த மூலதனச் செலவு–101. மேற்பரப்பு நீர் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JA சிறு பாசன சிறப்புத் திட்டம் –16 பெரும் பணிகள் " (த.தொ.கு. 4702–00–101–JA -1607)”.

5. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலம் அவர்கள் மேற்கண்ட திட்டப் பணியினை உடனடியாக மேற்கொண்டு குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கவும் மற்றும் திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதமும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண். 26435/பொ.ப. II/2008 நாள் 8.5.2008ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.ஆதிசேஷையா
அரசுச் செயலாளர்

பெறுநர்

முதன்மைத் தலைமைப்பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
நீர்வள ஆதாரத்துறை, சேப்பாக்கம், சென்னை.5
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலம், மதுரை 2.
தலைமைப்பொறியாளர்(திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத்துறை, சேப்பாக்கம், சென்னை.5
மாவட்ட கருவூல அலுவலர், தூத்துக்குடி
மாநில கணக்காயர், சென்னை.18

<u>நகல்</u>

நிதி (பொ.ப. II /வ.செ.II ) துறை, சென்னை.9
பொதுப்பணித் (சி.பா.1) துறை, சென்னை 9 (5 நகல்கள்)
இ.கோ /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்